**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:- திருமதி. ஆ. சுபஸ்ரீ, L.L.M.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**2026-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆடி திங்கள் 22 ம் நாள்**

**இ. ம. எண். 149/2026**
**இன்**
**அ.வ. எண். 22/2025**

M/s ரிலையன்ஸ் BP மொபிலிட்டி
லிமிடெட், அதன் பிரதிநிதியாக
பொது அதிகாரம் முகவர்
கருண்கிருஷ்ணன் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

K.ராமசாமி ..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

-----

இம்மனு கடந்த 27.07.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ரமணி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீராம் அவர்கள் முன்னிலையாகி நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய அனுமதி கோரி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 14ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதார்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்/வாதி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். வழக்குரை தாக்கல் செய்தபோது சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலவில்லை. மேலும் வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மனு ஆவணங்கள் மனுதாரர்/வாதியின் வழக்கை நிரூபிக்க இன்றியமையாத ஆவணங்கள் ஆகும். எனவே, மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி ஆவணங்களும் அசல் வழக்கின் தீர்வுக்கு அவசியம் என்பதால் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு ஆவணங்கள் ஜெராக்ஸ் நகலாக இருப்பதால் அவைகளை தாக்கல் செய்ய இயலாது. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும், மனு ஆவணங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அசல் வழக்கில் வழக்கு மூலத்துடன் மனு ஆவணங்கள் ஒன்றிபோகவில்லை. 28.06.2025ம் தேதியிட்ட காவல் நிலைய புகார் மற்றும் மனு ரசீது மற்றும் புகைப்படங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பற்றவை.

மேலும், அவைகளை சான்றாவணமாக ஏற்க இயலாது. 16.05.2025ம் தேதிக்குட்பட்ட சங்கதிகள் பொறுத்து வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், 28.06.2025ம் தேதிக்கு பிறகு ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்து வழக்குரையில் இல்லாததாலும், மேலும் மேற்படி விபரங்கள் அனைத்தும் அசல் வழக்கிற்கு தொடர்பற்றவை என்பதாலும், வழக்குரையை திருத்தம் செய்யாமல் மனு ஆவணங்களை தாக்கல் செய்ய இயலாது. எனவே, மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்பாக மனு ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கிற்கும் மனு ஆவணங்களுக்கும் தொடர்பு இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் ஏற்றதை ஆற்றுதல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1

விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுதல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இருதரப்பிற்கும் அவரவர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, மனு ஆவணங்களின் அசல் அல்லது சான்றிட்ட நகலை தாக்கல் செய்ய அனுமதி அளித்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.08.06 18:31:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.08.06 18:32:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.